RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 166 ஜூன்.23 2026 செவ்வாய்க்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “மேகேதாட்டு தீர்மானத்தில் விதிகளுக்கு புறம்பாக திருத்தம்” வெளிநடப்புக்குப் பின் இபிஎஸ் விளக்கம்

சென்னை: ஜூன்.23-

மேகேதாட்டு விவகாரம் தொடர்பான உரிமை மீறல் பிரச்சினையில் பேச அனுமதி அளிக்காத காரணத்தால் நேற்று சட்டப்பேரவையில் இருந்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “தமிழக சட்டப்பேரவை விதி 220ன் கீழ் அதிமுக சார்பாக ஒரு உரிமை பிரச்சினையை அவைக்கு கொண்டுவர அனுமதி கேட்டோம். மேகேதாட்டு தனித் தீர்மானத்தில் இடைச்செருகல் திருத்தம் செய்ததை அவை கவனத்துக்கு கொண்டுவருவது தொடர்பாக சபாநாயகரிடம் கடிதம் கொடுத்திருந்தோம். சபாநாயகர் ஜீரோ ஹவரில் இதுபற்றி பேச அனுமதிக்காத காரணத்தால், நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

மேகேதாட்டு விவகாரத்தில் ஜூன் 18 அன்று சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வரைவு தீர்மானத்தை மட்டும் அதிமுக சார்பில் ஆதரித்தோம். ஜூன் 19ஆம் தேதி சட்டப்பேரவை விதி 104ன் படி முன்மொழியப் படாத, இடைச்செருகல் சேர்க்கப்பட்ட திருத்திய தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. பேரவை விதி 104ன் கீழ் உறுப்பினர்களுக்கு அனுப்பிய வரைவு தீர்மானத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டுமானால், அரசின் சார்பான திருத்தங்கள் முறையாக அவைக்கு தெரிவிக்கப்பட்டு வரைவில் உள்ள தீர்மானத்துக்கு பதிலாக திருத்தப்பட்ட தனித் தீர்மானத்தை மொழிவதற்கு சபாநாயகரின் அனுமதி பெற்று, திருத்தப்பட்ட தீர்மானத்தை பேரவையில் முன்மொழிய வேண்டும். இதனையே சட்டப்பேரவையில் உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வந்தோம்.



விதிகளுக்கு புறம்பாக திருத்தத்தை முதல்வரின் பதில் உரையில் சேர்த்துள்ளார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஒரு தனித் தீர்மானம் ஜூன் 18ல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. அதன்பின்னர் விவாதம் நடைபெற்றது. பிறகு முதல்வரின் பதிலுரையில் இந்த இடைச்செருகல் திருத்தத்தை சேர்த்துள்ளார்கள். எனவே, விதிகளின் படி அவர்கள் இந்த தீர்மானத்தை கொண்டுவரவில்லை என்பதை தெரிவிக்கவே நாங்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினையை கொண்டுவந்தோம். அதற்கு சபாநாயகர் அனுமதிக்கவில்லை என்பதால் அதிமுக வெளிநடப்பு செய்துள்ளது.

காவிரி நதி நீர் என்பது தமிழகத்தின் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக உள்ளது. ஏற்கெனவே நடுவர் மன்றம் ஒரு நிலையான தீர்ப்பை வழங்கி விட்டது. அப்படி இருக்கையில் மீண்டும் ஒரு நடுவர் மன்றம் வேண்டும் என எந்த நோக்கத்துக்காக கேட்கிறார்கள். 15 ஆண்டுகள் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என உச்ச நீதிமன்றமும் தெளிவான தீர்ப்பு அளித்துள்ளது.

கீழ்ப்படுகை மாநிலங்களின் அனுமதி இல்லாமல், மேல் படுகை மாநிலம் காவிரி நீரை தடுக்கவோ, தேக்கவோ, திருப்பி அனுப்பவோ கூடாது என உச்ச நீதிமன்றம் தெளிவாக சொல்லிவிட்டனர். அப்படியிருக்கையில் மீண்டும் நடுவர் மன்றம் கேட்கும் தீர்மானத்தை ஏன் கொண்டுவந்தார்கள் என்று கேள்வி எழுப்புகிறோம்” என்றார்.

## “மேகேதாட்டு விவகாரத்தை கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும்”

### பேரவையில் பிரேமலதா கோரிக்கை

சென்னை: ஜூன்.23-

“மேகேதாட்டு விவகாரத்தை தமிழக முதல்வர் விஜய், கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும். இல்லையெனில் சட்ட ரீதியாக எதிர்கொண்டு இந்த விவகாரத்தில் நிரந்தர தீர்வினை ஏற்படுத்த வேண்டும்” என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.



சட்டப்பேரவையில் பேசிய பிரேமலதா, “சட்டப்பேரவையில் பேசுவதற்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநர் உரை தமிழ்த் தாய் வாழ்த்தோடு தொடங்கியதை வரவேற்கிறேன். அதேபோல ஆளுநர் உரை ஆளும் கட்சியின் உரையாக இருந்தது. ஆளுநரின் 37 நிமிட உரை முழுவதும் ஆளும் தவெக அரசுக்கு ஆதரவாக மட்டுமே எழுதப்பட்டிருந்தது. 37 நிமிட உரையில் தமிழ் உச்சரிப்பில் 37 தவறுகள் இருந்தன, இது வேதனையானது. நமது தலைவர்களின் பெயரை சொல்லும் போது அத்தனை தவறுகள் இருந்தது.

மேகேதாட்டு அணை விவகாரத்தில் யாரும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தமிழகம், கேரளா, கர்நாடகாவில் இப்போது புதியவர்கள் முதல்வர்களாக பொறுப்பேற்றுள்ளனர். எனவே, மேகேதாட்டு விவகாரத்தை தமிழக முதல்வர் கர்நாடக முதல்வருடன் நட்பு ரீதியாக பேசித் தீர்க்க வேண்டும். இல்லையெனில் சட்ட ரீதியாக எதிர்கொண்டு இந்த விவகாரத்தில் நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும்” எனத் தெரிவித்தார்.

சுவாரஸ்யப் பேச்சு:

பிரேமலதா பேசும்போது, “சட்டப்பேரவையில் சில்வர் டம்ளர்களில் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதற்கு பதிலாக கண்ணாடி பாட்டில்களில் தண்ணீர் வழங்க வேண்டும்” என்றார். அப்போது குறுக்கிட்ட திமுக எம்எல்ஏ ஓ.பன்னீர்செல்வம், “கண்ணாடி பாட்டில்களில் தண்ணீர் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதல்ல. அப்படி வழங்கினால், கோபம் வரும்போது தூக்கி எறியவும் வாய்ப்புள்ளது.” என்றார். அப்போது குறுக்கிட்ட திமுக எம்எல்ஏ தங்கம் தென்னரசு, “ஓபிஎஸ் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இதைப் பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்” எனத் தெரிவித்ததும் அவையில் சிரிப்பலை நிலவியது.

## “பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்க” பேரவையில் சவுமியா அன்புமணி வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.23-

“மகாராஷ்டிராவில் விவசாயிகளின் எல்லா கடனையும் தள்ளுபடி செய்துள்ளார்கள். தமிழகத்திலும் அவ்வாறே கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகள் ஒரு வருடத்தில் வாங்கிய கடனை மட்டுமே தள்ளுபடி செய்துள்ளீர்கள். அதற்கு முந்தைய ஆண்டுகளில் விவசாயிகள் வாங்கிய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்” என பாமக சட்டப்பேரவைக் குழு தலைவர் சவுமியா அன்புமணி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் உரையாற்றிய பாமக சட்டப்பேரவைக் குழு தலைவர் சவுமியா அன்புமணி, “ஒரு அறையை எந்தப் பொருளை கொண்டு வேண்டுமானாலும் நிரப்பலாம். ஆனால் அந்த அறையில் ஒரு விளக்கை ஏற்றிவைத்தால் போதும், அதன் ஒளியில் அறையே நிரம்பிவிடும். அப்படிப்பட்ட நிகழ்ச்சியையே ஆளுநர் உரையில் நான் பார்த்தேன்.



சமூக நீதி சர்வே நடத்தப்படும் என்ற அந்த ஒரு வாக்கியம், இந்த சட்டப்பேரவையை மட்டும் ஒளிபெற செய்யவில்லை. தமிழக மக்களின் அனைத்து இல்லங்களிலும் வெளிச்சத்தை கொடுத்தது. 100 ஆண்டுகளுக்கு பிறகு சமூக நீதி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்ற அந்த வாக்கியம் வரலாற்று சிறப்பு மிக்கது.

சமூக நீதி சர்வே நடத்தப்படுவதால் தமிழகத்தின் அனைத்து இல்லங்களுக்கும் எல்லா நலத்திட்டங்களும் சென்று சேரும். வேளாண் குடிமக்கள் மட்டும் வெயில், மழை, வெள்ளக் காலங்களில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். பல சிரமங்களை தாண்டியே விவசாயிகள் நமக்கு உணவை அளிக்கின்றனர். விவசாயிகள் பயிர் செய்வதற்காக தேசிய வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், தனியார் வங்கிகள் என எல்லா இடங்களிலும் கடன் வாங்கி விவசாயம் செய்கிறார்கள்.

மகாராஷ்டிராவில் விவசாயிகளின் எல்லா கடனையும் தள்ளுபடி செய்துள்ளார்கள். தமிழகத்தில் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழகத்தில் உள்ள 3ல் 2 பேர் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்கிறார்கள். 10 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியவர்கள் கூட வெளிநாட்டில் வசதியாக வாழ்கிறார்கள். ஆனால், ரூ. 10 ஆயிரம் கடனுக்காக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். 2021, 22, 23ம் ஆண்டுகளில் 1,968 விவசாயிகள் தமிழகத்தில் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அப்படியானால், ஒரு நாளைக்கு இரு விவசாயிகள் தமிழகத்தில் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என புள்ளிவிவரம் சொல்கிறது.

இப்போது கடுமையான வறட்சியை தரக்கூடிய சூப்பர் எல் நினோ வரப்போகிறது. அதற்கு தயாராக இருக்க வேண்டும். விவசாயிகள் 100 அடி ஆழ பள்ளத்தில் உள்ளனர். ஆனால், அரசு அவர்களுக்கு 50 அடிக்கே கயிறு கொடுத்துள்ளது. அவர்களால் எப்படி வெளியே வர முடிய வேண்டும். நிதிச்சுமை, கடன் சுமை, கூடுதல் செலவினம் என அதிகாரிகள் சொல்வார்கள். அதனையெல்லாம் ஒதுக்கிவைத்து முழுமையாக விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

2 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடியை ரூ.6 ஆயிரம் கோடியாக உயர்த்தியுள்ளீர்கள். ஆனால், ரூ.18 ஆயிரம் கோடியையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதேபோல விவசாயிகள் ஒரு வருடத்தில் வாங்கிய கடனை மட்டுமே தள்ளுபடி செய்துள்ளீர்கள். அதற்கு முந்தைய ஆண்டுகளில் விவசாயிகள் வாங்கிய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் செய்வோருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும். பெண்கள், குழந்தைகள் மீது கை வைப்பவர்களுக்கு உயிர் பயத்தை காட்ட வேண்டும். தருமபுரியில் ஒரு நபருக்கு ஒரு குடம் குடிநீர் கூட இல்லை. எனவே தருமபுரி காவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். தருமபுரியில் சிப்காட் அமைக்க வேண்டும்” என்றார்.



■ இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை வட்டாரம், அமராவதி புதூர், கிராமிய பயிற்சி மையத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தோட்டக்கலை பயிர்களுக்கான சாகுபடி தொழில் நுட்பங்கள் என்னும் தலைப்பில் விவசாய கருத்தரங்கை துவக்கி வைத்து, தோட்டக்கலை பயிர்களை பற்றி தொழில்நுட்ப கையேடினை வெளியிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் டி.இளங்கோவன் (மானாமதுரை) மற்றும் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் மு.சத்தியா உட்பட பலர் உள்ளனர்.

## திருப்பரங்குன்றம் தீப வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு: ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்

மதுரை: ஜூன்.23-

திருப்பரங்குன்றம் தீப வழக்கில் இரு நீதிபதிகள் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என ஐகோர்டில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடக்கோரி ராம ரவிக்குமார் உள்ளிட்ட பலர் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை ஒருசேர விசாரித்த தனி நீதிபதி, மலை உச்சியில் உள்ள தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிட்டார். இந்த உத்தரவு நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர் காவல் ஆணையர், செயல் அலுவலர் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு எதிராகவும், தனி நீதிபதி உத்தரவுக்கு எதிராகவும் மேல் முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.



இதனை விசாரித்த இரு நீதிபதிகள், தனி நீதிபதி தீர்ப்பை உறுதி செய்து, கார்த்திகை தீப நாளில் தீபத் தூணிலும் கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டனர். நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தன. அப்போது, அரசுத் தரப்பில், “உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது” எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், “ஏன் இந்த வழக்கை நிலுவையிலேயே வைத்திருக்க விரும்புகிறீர்கள் ? நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் என்ன சிக்கல் ?" என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

அப்போது அரசுத் தரப்பில், “அது நோக்கம் அல்ல. 100 ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்வதா புதிய முறையை தொடர்வதா என்பது குறித்து முடிவெடுக்கப்பட வேண்டும்,” எனத் தெரிவிக்கப்பட்டது.

ராம ரவிக்குமார் உள்ளிட்ட மனுதாரர்கள் தரப்பிலும், தர்கா தரப்பிலும், அரசு தரப்பிலும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் இந்த வழக்கை ஜூலை 27ம் தேதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தொடர்ந்து நீதிபதிகள், “மத நல்லிணக்கம் முக்கியமானது. அங்கு வாழும் மக்களின் அமைதி முக்கியமானது. மக்கள் கள நிலவரத்தை முழுமையாக அறிவார்கள். ஆகவே, இரு தரப்பிலும் அமைதியான முறையில் என்ன செய்யலாம் என்பது தொடர்பாக முடிவு எடுக்க முயற்சிக்கலாம்,” என்று அறிவுறுத்தி விசாரணையை ஒத்திவைத்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரத்திற்கு உட்பட்ட NVS திருமண மண்டபத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு முதலாம் ஆண்டு முப்பெரும் ரத்ததான முகாம் தொடக்க விழா தமிழக வெற்றி கழக திருப்பத்தூர் மத்திய நகர கழக செயலாளர் எஸ்.அச்சுதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தமிழக வெற்றிக் கழக திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் முனுசாமி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் என்.திருப்பதி எம்எல்ஏ., கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தனர். இம்முகாமில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்து தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளையோட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டனர்.



## சேலத்தில் சர்வதேச அளவிலான சிலம்பம் போட்டிஆவடி மாணவர்கள் சாதனை

மாதவரம், ஜூன்.23-

சேலத்தில் அமைந்துள்ள பத்மாவதி கல்லூரியில் சிலம்பம் அசோசியேஷன் ஆஃப் இந்தியா சார்பில் ஏழாவது சர்வதேச அளவிலான சிலம்பப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலம்பம் வீரர்கள் கலந்துகொண்டனர். அதில் இந்தியா தமிழ்நாடு திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இருந்து மாஸ்டர் டாக்டர் ராஜா, டாக்டர் மாஸ்டர் சங்கீதா, மாஸ்டர் ஆசில்அக்னி ஆகியோர் தலைமையில் இப்போட்டியில் சிலம்பம் பயின்ற வீரர்கள் கலந்துகொண்டு தனது தனி திறமைகளை வெளிப்படுத்தி சாதனை படைத்தனர். அதில் பத்து தங்கப்பதக்கம், ஏழு வெள்ளி பதக்கம், 11 வெங்கல பதக்கம் பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து சென்னை திரும்பிய சாதனை படைத்த சிலம்பம் வீரர்களுக்கு சக ஆசான்கள், பெற்றோர்கள் இனிப்புகளை வழங்கி வெகுவாக பாராட்டி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



■ சென்னை, போரூர் தொழில்துறை எஸ்டேட், ஏகாம்பரம் நாயக்கர் முதல் மெயின் ரோட்டில் எஸ் எஸ் ஹைதராபாத் பிரியாணி 29 வது புதிய கிளை மிக பிரம்மாண்ட திறக்கப்பட்டது. ஒரு நாள் சிறப்பு சலுகையாக இரண்டு சிக்கன் பிரியாணி வாங்கினால் ஒரு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. வருகை தந்த வாடிக்கையாளர்களை உரிமையாளர் அப்துல் சம்மந் மற்றும் மேலாளர் மோகன், சேகர், அக்கில் அனைவரையும் அன்புடன் வரவேற்றனர்.

## உலக இசை தின விழா: வயலின் இசை நிகழ்ச்சியை ரசித்த பொதுமக்கள்

கிருஷ்ணகிரி, ஜூன்.23-

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளி சார்பில், உலக இசை தின விழா காட்டிநாயனப்பள்ளி முருகன் கோவில் வளாகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. அரசு இசைப்பள்ளி மாணவர்களின் மங்கள இசையுடன் தொடங்கிய விழாவிற்கு தலைமை ஆசிரியர் திரிவேணி வரவேற்புரை வழங்கினார்.




விழாவில் வாணி கலா நிபுணர் ஆனையம்பட்டி வெங்கடசுப்ரமணியன் சிறப்பு வயலின் இசை நிகழ்ச்சியை வழங்கினார். அவருடன் பாளையங்கோட்டை குருராகவேந்திரன் மிருதங்கமும், நெற்குணம் முனைவர் சங்கர் கஞ்சிராவும் வாசித்து இசை நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற இந்த இசை நிகழ்ச்சியை பக்தர்கள், இசைப்பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆர்வமுடன் கண்டு ரசித்தனர். நிகழ்ச்சியை நாதஸ்வரம் ஆசிரியர் பிரகாஷ் தொகுத்து வழங்கினார். தேவாரம் ஆசிரியர் கதிர்வேல், குரலிசை ஆசிரியர் கல்யாணகுமார், மிருதங்கம் ஆசிரியர் கருணா, பரதநாட்டிய ஆசிரியர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். தவில் ஆசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.கடந்த நான்கு ஆண்டுகளாக உலக இசை தின விழா கொண்டாடப்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் ஒரே நாளில் அரசு இசைப்பள்ளிகள் சார்பில் உலக இசை தின விழா கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் பகுதியில் ஏழை எளிய மக்களுக்கு பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது

பல்லாவரம், ஜூன்.23-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. பம்மல் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, தவெக நிர்வாகி வழக்கறிஞர் லோகநாதன் தலைமை தாங்கினார்.



இந்நிகழ்ச்சியில் தமிழக மனிதவளத்துறை அமைச்சர் சரத்குமார், உணவு மற்றும் நுகர்வோர் பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கட்ராமன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு, முதலமைச்சரின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக பிரம்மாண்ட கேக் வெட்டி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் நிகழ்ச்சியில் மேடையில் பேசிய மனித வளத்துறை அமைச்சர் சரத்குமார் எதிர்க்கட்சிகள் பலரும் நம்மை ரீல்ஸ் போடும் ஆட்சி என்று விமர்சிக்கிறார்கள். இது வெறும் ரீல்ஸ் போடும் ஆட்சி மட்டுமல்ல கடந்த 30 ஆண்டுகாலமாக மக்களுக்கு ரியலாக நலத் திட்டங்களைக் கொடுத்துப் பெயர் எடுத்த ஆட்சி. நம்ம முதலமைச்சர் பதவி பொறுப்பேற்ற உடனே தவறு செய்பவர்களுக்கு பயம் வந்துவிட்டது. அரசு அதிகாரிகள் ஊழல் செய்யவே அஞ்சுகிறார்கள். சமீபத்தில் கூட கௌரிவாக்கம் பகுதியில் உதவி பொறியாளர் ஒருவர் லஞ்சம் வாங்கியதாக வீடியோ வெளிவந்த உடனே, நமது ஆட்சியில் அவர் உடனடியாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். இதேபோல ஒவ்வொரு அரசு ஊழியரும் லஞ்சம் வாங்கப் பயப்படும் அளவிற்கு ஒரு நேர்மையான ஆட்சியை நாம் உருவாக்கியுள்ளோம். இந்த விழாவில் பல்லாவரம் மற்றும் பம்மல் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன சலவை பெட்டிகள் வீட்டு உபயோகப் பொருட்கள், தையல் இயந்திரங்கள். மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கான நவீன மூன்று சக்கர வாகனங்கள் மாணவர்கள் 50 பேருக்கு தலா ₹5,000 கல்வி நிதியுதவி.

இவ்விழாவில் 300க்கும் மேற்பட்ட பெண்களும், தவெக கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் பெரும் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ சென்னை கொளத்தூர், பொன்னி அம்மன் மேடு சாஸ்திரி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாய் விளங்கும் பரம்பொருளின் மூத்த முதல்வனாய் விளங்கும் ஆனைமுகத்தான் திருவருள் துணை கொண்டு சாஸ்திரி நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்பாலித்து கொண்டிருக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாகிய ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் பெருமானுக்கு மங்களகரமான ஸ்ரீ பராபக வருடம் உத்திராயணம் க்ரீஷ்ம ருது, ஆனி மாதம் ஏழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை சுக்லபக்ஷ சப்தமி திதி, பூர நட்சத்திர, சிம்ம லக்னம், அமிர்த யோகமும் கூடிய நன்னாளில் குரு ஹோரையில் அருள்மிகு ஸ்ரீ வினைத்தீர்த்த விநாயகர் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய தலைவர் அசோக் குமார், செயலாளர் ஆனந்தன், பொருளாளர் டெல்லிபாய், துணை செயலாளர் மணி, இணைசெயலாளர் சுப்பையா, மற்றும் ஆலய விழா குழுவினர், ஊர் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. உடன் அறந்தாங்கி சபதி ராஜ்குமார் ஆலய கட்டுமான பணிகளை சிறப்பாக செய்திருந்தார். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம்,அன்னதானம் வழங்கப்பட்டது.



## தவெக தலைவர் ஜோசப் விஜயின் பிறந்த நாளை முன்னிட்டு பழனியில் நலத்திட்ட உதவிகள்

பழனி, ஜூன்.23-

தமிழ்நாட்டு முதல்வரும் ,தவெக தலைவர்மான ஜோசப் விஜயின் 52 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தவெக நகர தலைமை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. முன்னதாக பழனி குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயிலில் ஜோசப் விஜய் அவர்களின் பெயரில் சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை போன்றவை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பழனி அரசு மருத்துவமனையில் இன்று பிறந்த 6 குழந்தைகளுக்கு பழனி நகர தலைமையில் சார்பில் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து பழனி அரசு மருத்துவமனையில் ஜோசப் விஜய் அவர்களின் புகைப்படம் வைக்கப்பட்டது. மேலும் பழனி பேருந்து நிலையத்தில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பழனி மதீனா நகரில், அப்பகுதியில் நிர்வாகிகள் சார்பில் இரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமானோர் ரத்த தானம் செய்தனர்.

இந்த அனைத்து நிகழ்வுகளிலும் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா செயற்குழு உறுப்பினர் பழனி பாலன் , விஜய் சிவா மிதுன் , ரிஜித் ,ஆசிக் மற்றும் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



## பழனி முருகன் கோவிலில் தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தங்கத்தேர் இழுத்து தமிழக வெற்றிக் கழகத்தினர் வழிபாடு!

பழனி, ஜூன்.23-

தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் அவரது கட்சியினர் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பு வழிபாடுகள் மூலம் கொண்டாடி வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக, அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. திண்டுக்கல் மேற்கு மாவட்டம் நல்லுசாமி தலைமையில் திரண்ட கட்சியினர், முதல்வர் ஜோசப் விஜய் பெயரில் கோவிலில் சிறப்பு அர்ச்சனைகள் செய்தனர்.அதனைத் தொடர்ந்து, உலக மக்கள் நலம் பெறவும், தமிழக முதல்வரின் அரசியல் பயணம் சிறக்கவும் வேண்டி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிக்கு தங்கத்தேர் இழுத்து நேர்த்திக்கடன் செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஒட்டன்சத்திரம், பழனி வேடசந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சியினர் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். பொதுமக்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.



■ நீலகிரி மாவட்டத்தின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக சு.பாலாஜி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## ஜூன் 25ல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: விவசாயிகள் பங்கேற்க அழைப்பு

கிருஷ்ணகிரி, ஜூன்.23-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 25.06.2026 (வியாழக்கிழமை) நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ச. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



இந்த கூட்டம் காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. இதில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் குறைகளை நேரடியாக தெரிவிக்கலாம்.

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணும் நோக்கில் நடைபெறும் இந்த கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# முடிச்சூரில் சிவா விஷ்ணு நகரில் உலக தந்தையர் தின விழா முடிச்சூர் குடியிருப்போர் நல சங்கங்களின் சார்பில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது





முடிச்சூர், ஜூன்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூரில் சிவா விஷ்ணு நகரில் உலக தந்தையர் தின விழா முடிச்சூர் குடியிருப்போர் நல சங்க தலைவர் பா.தவமணி தலைமையில் குடியிருப்போர் நல சங்க செயலாளர் ஏ.ஜெயசீலன் வரவேற்பில் சந்தானகிருஷ்ணன், லட்சுமணன், தியாகராஜன், துரைராஜ், ராஜவேல், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக முடிச்சூர் குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பா.தாமோதரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் இதில் பள்ளி பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 12ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 3000 10ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 1500 பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்திய செயலாளர், ஸ்ரீ சாஸ்தா சாரிடபிள் டிரஸ்ட் தா.மு.தா.ஜோதிலிங்கம் வழங்கினார் அதனைத் தொடர்ந்து மகளிர் அணி செயலாளர் அபிராமி மேகனரங்கம் ஏற்பாட்டில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள், சிவா விஷ்ணு நகரில் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர் அனைவருக்கும்

# பல்லாவரத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக மாபெரும் விழிப்புணர்வு பேரணி

பல்லாவரம், ஜூன்.23-

தமிழகத்தில் தொடர்ந்து அரங்கேறி வரும் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமைகள், பாலியல் அத்துமீறல்கள் மற்றும் கொடூரமான படுகொலைகளைக் கண்டித்து பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் சார்பாக மாபெரும் விழிப்புணர்வு பேரணி (21.06.2026) அன்று பல்லாவரத்தில் நடைபெற்றது

இப்பேரணியை TNTJ மாநில துணைப் பொதுச்செயலாளர் ஏ.கே. அப்துல் ரஹீம் அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்கள். இப்பேரணியில் மாவட்ட தலைவர் அப்துல் சமது மாவட்ட செயலாளர் நசீர் மேலும் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் இப்பேரணியில் நடைபெற்றது பல்லாவரம் யாசின் கான் தெருவில் சுமார் 4:30 மணியளவில் துவங்கிய பேரணி. பல்லாவரம்



G.S.T.சாலையில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில் முடிவுற்றது. இப்பேரணியில் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் கலந்து கொண்டு பாலியல் வன்முறைகளுக்கெதிராக கோஷங்களை எழுப்பினர். கைகளில் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான கண்டனங்கள் மற்றும் அதற்கான தீர்வுகளை சொல்லும் பாதாகைகளை ஆயிரக்கணக்கானோர் ஏந்திக் கொண்டு எழுச்சியுடன் இப்பேரணியில் பங்கேற்றனர்.

பேரணியின் முடிவில் பேசிய மாநில துணைப் பொதுச்செயலாளர் ஏ.கே.அப்துல் ரஹீம் அவர்கள் பெண்கள் பாதுகாப்பாக வாழ வேண்டிய மண்ணில், இன்று அவர்கள் அச்சத்துடனும் பதற்றத்துடனும் வாழும் நிலை உருவ ாகியுள்ளது. பள்ளிக்குச் செல்லும் சிறுமிக்கும் பாதுகாப்பில்லை வேலைக்குச் செல்லும் பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை என்ற அவகநிலை தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.சில வாரங்களுக்கு முன்னால் கோவை மாவட்டம் சூலூர் பகுதியில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, பின்னர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழக மக்களின் மனதை உலுக்கியது அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மீது நிகழ்த்தப்பட்ட மனிதாபிமானமற்ற கொடூரங்கள் நெஞ்சை பதறச் செய்கின்றன இந்த சம்பவத்தின் தாக்கம் குறைவதற்குள் கும்மிடிப்பூண்டியில் ஒரு மூன்று வயது குழந்தை பாலியல் வன்முறைக் குட்படுத்தப்பட்டு மரணித்துள்ளது இந்தச் சம்பவங்கள் மட்டுமல்க இதற்கு முன்னரும் இதுபோன்ற பல கொடூரங்கள் தமிழகத்தில் அரங்கேறியுள்ளன.இந்த நிலை தொடரக் காரணம் என்ன என்பதை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. அவை மேலும் கடுமையாக்கப்பட வேண்டும். இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எளிதில் ஜாமீன் கிடைக்கும் நிலை உள்ளது. இது கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும். பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை போன்ற கொடூரக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்ட னை வழங்கப்பட வேண்டும் அப்போதுதான் குற்றவாளிகளின் மனதில் அச்ச உருவாகும். இத்தகைய குற்றங்கள் குறையும். எனவே, பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்க கடுமையான சட்டங்கள் இயற்ற வேண்டும். பாலியல் வன்கொடுமை குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்கக் கூடாது. கொடூரமான பாலியல் குற்றங்களுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்




# ஆரோக்கியமான முதுமைக்கான யோகா முகாம்

வாணியம்பாடி, ஜூன்.23-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா முகாம்" 19.06.2026 அன்று கிரிசமுத்திரம் கிராமத்தில் நாட்டு நலப்பணி திட்ட குழு நடத்தினர்.

இவ்விழாவிற்கு மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரித் தலைவர் வி.தி லீப் குமார் ஜெயின் மற்றும் கல்லூரிச்செயலர் ஆனந்த்சிங்வி ஜெயின் அவர்களும் தலைமை யேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் ம.இன்பவள்ளி வாழ்த்துரை வழங்கி சிறப்பு விருந்தினர்களுக்கு சிறப்பு செய்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கிரிசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய பள்ளியின் தலைமை ஆசிரியை கண்ணம்மா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் பொழுது யோகா என்பது ஆரோக்கியமாக வாழ உதவுகின்றது. உடல் இயக்கம் சமநிலையில் இருக்க உதவுகின்றது. மூட்டு அசைவுகள் மென்னையாக செயல்பட்டு விறைப்புத் தன்மையை கட்டுப்படுத்த உதவுகின்றன. அறிவாற்றலை அதிகரிக்கச் செய்கின்றன. மன அழுத்தத்தை குறைக்கிறது. நரம்பு மண்டலத்தை அமைதிபடுத்தி உடலில் உள்ள செல்களில் முதுமையை குறைக்கவும் மூளையை ஆரோக்கியமாக வைக்கவும் கவனம் மற்றும் உணர்ச்சி ரீதியான மீள்திறனை மேம்படுத்தவும் மூச்சுப்பயிற்சி என்ற ஆசனத்தை பயன்படுத்தி நமது வாழ்வியலை நோய் நொடி இல்லாமல் வழி நடத்த இத்தகைய யோகா தியானப் பயிற்சி ஆசனங்கள் பயன்படுகின்றன என்பதனை எடுத்துரைத்தார். மாணவிகள் இம்முகாமில் 131 க்கும் மேற்பட்ட அப்பள்ளியின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பேரா. சந்தியா பேரா. ஜெயஸ்ரீ ஏற்பாடு செய்தனர். இறுதியாக நாட்டுப் பண்பாட விழா இனிதே நிறைவு பெற்றது

# உதகை அண்ணா அரங்கில் நீலகிரி மாவட்ட சமூக நீதி மற்றும் உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் உலக யோகா தின நிகழ்ச்சி

உதகை, ஜூன்.23-

நீலகிரி மாவட்டம் உதகை, யோகா தினத்தை முன்னிட்டு மேரா யுவ பாரத் சார்பில் அண்ணா அரங்கில் உதகை சுற்று வட்டார பகுதியில் இருந்து மாணவ மாணவிகள் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு யோகா பயிற்சிகளை மேற்கொண்டனர், யோகா ஆசிரியர் அர்ஜுனன் மற்றும் ஆண்டனி ஒருங்கிணைத்தனர்,

மேரா யுவபாரத் இணை இயக்குனர் விவேக் அனைவரையும் வரவேற்றார், நீலகிரி மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சமூக நீதி மற்றும் உரிமைகள் பிரிவு சுந்தரேசன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது , சிறப்பு விருந்தினர்களாக ரோட்டரி உதகமண்டலம் பொறுப்பாளர் காயத்ரி , ஒருங்கிணைந்த சேவை மையம் அதிகாரிகள், நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் மாவட்ட தலைவர் சுரேஷ் ரமணா, மாவட்ட செயலாளர்






கன்டோன்மென்ட் வினோத் மற்றும் உதகை ஷியிபிஸி பிரிவு புள்ளிஇயல் ஆய்வாளர். கவிஞர்.சு.குணசீலன் அவர்களின் யோகா தின பாடல் அனைவரையும் கவர்ந்தது, டி இசட் என் நடன பள்ளி ஆசிரியர் சாய் ஆகியோர் கலந்து கொண்டனர் பங்குபெற்ற பள்ளிகளுக்கு சான்றிதழ்கள் கேடயங்கள் வழங்கப்பட்டன, உலக யோகா தினத்தை சிறப்புடன் பங்குபெற்ற அனைத்து பள்ளிகளுக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் மேரா யுவ பாரத் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு ரஞ்சித் நன்றி உரையாற்றினார். தமிழியக்க மாவட்ட மாணவர் அணி பொறுப்பாளர் சுதீர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.





■ சென்னை, பூந்தமல்லி குமணன்சாவடி கன்னம்புள்ளி செட்டி தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றிய சமயபுரம் முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக பூவை மு.வெங்கடேசன், பானு வெங்கடேசன் இவர்களது ஏற்பாட்டில் நடைபெற்றது. மேலும் சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது.



# தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜயின் 52 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கூத்தாண்ட குப்பம் ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

நாட்றம்பள்ளி, ஜூன்.23-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் நாட்றம்பள்ளி தாலுக்கா கூத்தாண்டகுப்பம் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு 21/06/2026 அன்று காலை 10 மணியளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவச் செல்வங்களுக்கு பாராட்டு விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா, கூத்தாண்டகுப்பம் ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் விழா ஒன்றிய செயற்குழு உறுப்பினர் குமரேசன் , கூத்தாண்டகுப்பம் ஊராட்சி செயலாளர் திருப்பதி, ஊராட்சி நிர்வாகி சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக

ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் பிரகாசம் கலந்து கொண்டு பொது மக்களுக்கு அன்னதானம் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள். மேலும் கூத்தாண்டகுப்பம் கேத்தாண்டபட்டி ஊராட்சி பகுதியைச் சேர்ந்த அதிமுக திமுக கட்சியில் இருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் 20க்கும் மேற்பட்டோர் ஒன்றிய செயலாளர் பிரகாசம் முன்னிலையில் இணைந்தனர். அவர்களுக்கு தமிழக வெற்றிக்கழக கட்சி சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர். உடன் ஒன்றிய பொருளாளர் விக்னேஷ் , ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் ரமேஷ், சரத், முருகன், செல்வம், காளிதாசன், சதீஷ், பாபு மற்றும் தமிழக கட்சி கழக கூத்தாண்டகுப்பம் ஊராட்சி நிர்வாகிகள் , கேசவன் , விஜயகுமார் , தமிழரசன் , மகளிர் அணியை சார்ந்த தீபா , ரம்யா , விவிதா , ஹரிணி மற்றும் ஒன்றிய மகளிர் அணி நிர்வாகி அம்மு , பவித்ரா மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# காரணி கிராமம் கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா

மாதவரம், ஜூன்.23-


திருவள்ளூர் மாவட்டம் பூச்சிஅத்திப்பேடு அடுத்த காரணி கிராமம் இன்பன்ட் ஜீசஸ் நகரில் புதியதாக எழுந்தருளிருக்கும் அருள்மிகு கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா திருஞான சம்மந்தர் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனர் சிவனடியார் ஜெ.வாசுகி அம்மையார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் திருவிளக்கு வழிபாடு, புனிதநீர் வழிபாடு, நீலத்தேவர் வழிபாடு, போறொளி வழிபாடு, தேவாரம், திருவாசகம் ஓதுதல், திருமுறை பாராயணம், பண் ஓதுதல், காப்பு அணிவித்தல், இறை திருமேனி நிலை நிறுத்துதல், மண்ணெடுத்து பூசித்தல், முளையிடுதல், வேள்வி சாலை அமைத்தல், முதல் மூன்றுகால யாகசாலை பூஜைகள் மற்றும்





நாடிசந்தானம், நிறையவி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.பின்னர் கைலாய வாத்தியங்கள் முழங்க யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை கொண்டு சென்று திருக்கோவில் விமானம், மூலவர்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். பின்னர் கற்பகாம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் சுவாமி மற்றும் விநாயகர், முருகர், தட்சணாமூர்த்தி, லிங்கோத்பார், பிரம்மா, வாராகி, வைஷ்ணவி, துர்கை, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்மந்தர் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இப்பெருவிழாவிற்கு திருக்கோவில் நிர்வாகிகள், திருஞான சம்மந்தர் தொண்டு அறக்கட்டளையின் சிவனடியார்கள் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.







# பெருங்காவூர் ஸ்ரீ கங்கையம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூன்.23-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பெருங்காவூர் ஊராட்சி மதுரா மேட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கங்கையம்மன் ஆலயத்தில் 5ம் ஆண்டு தீமிதி திருவிழா கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் கணபதி ஹோமம்,கொடிஏற்றுதல், காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், வாடைபொங்கல் வைத்தல் மற்றும் அம்மனுக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பப்படையல் பூஜை நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து சுமார் 100க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அம்பத்தூர் நகரமன்ற தலைவர் கே.என்.சேகர் மற்றும் ஆலய பொறுப்பாளர்கள், கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.



## தேனியில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம்

தேனி, ஜூன்.23-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், 'Start Run, Stop Drug – Anti Drug Run 2026' விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துரையாடி தெரிவித்ததாவது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 26.06.2026 அன்று Start Run, Stop Drug – Anti Drug Run 2026' விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. இவ்விழிப்புணர்வு ஓட்டம் நிகழ்ச்சியில் மாணவர்கள், இளை ஞர்கள், தன்னார்வ அமைப்புகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ள இருப்பதால், அவர்களுக்கு தேவையான பாதுகாப்புவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் காவல்துறை, நகராட்சித்துறை, சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .ரமேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் .கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் .சிவக்குமார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





## மாதவரத்தில் யோகா தினம் பொதுமக்களுக்கு இலவச யோகா பயிற்சி

மாதவரம், ஜூன்.23-

மாதவரம் நடராஜன் நகர் விரிவாக்கம் குடியிருப்பு பகுதியில் இயங்கிவரும் பிரம்மா குமாரிகள் வித்யாலயம் புதிய தியான சிவ தர்ஷன் பவனில் யோகா தினத்தை முன்னிட்டு மாதவரம் சிவ தர்ஷன் பவன் பிரம்ம குமாரிகள் சார்பில் பொதுமக்களுக்கு இலவச யோகா பயிற்சி நடத்தும் நிகழ்ச்சி பிரம்ம குமாரிகள் மாதவரம் கிளை நிலைய பொறுப்பாளர் பி.கே. கீதா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திருவாரூர் மாவட்ட டி.எஸ்.பி.ஸ்ரீனிவாசன் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றிவைத்து யோகா பயிற்சி நிகழ்ச்சினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர். பின்னர் தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கீதா, செண்பகவள்ளி ஆகியோர் சுமார் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவசமாக யோகா பயிற்சியினை கற்றுக்கொடுத்தனர். இதில் பிரம்ம குமாரிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## ஆனந்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைவிரித்தாடும் குடிநீர் தட்டுப்பாடு கண்டு கொள்ளாத அதிகாரிகளால் மாணவ மாணவிகள் அவதி

ஆர் எஸ் மங்கலம், ஜூன்.23-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாட்டை கண்டு கொள்ளாத அதிகாரிகளால் மாணவ மாணவிகள் தாகத்தோடு கல்வி கற்கும் நிலை தொடர் கதையாக இருந்து வருகிறது பெரும்பாலான மாணவ மாணவிகள் தங்களின் வீடுகளில் இருந்து பல கிலோமீட்டர் தொலைவில் உள்ள பள்ளிக்கு குடிநீரை வாட்டர் பாட்டிலில் எடுத்து செல்வதால் அரசு மேல்நிலைப் பள்ளியில் குடிநீர் தடைப்பட்டு இருப்பதை அறிந்த மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர்.




கோடை விடுமுறை நிறைவு பெற்று பள்ளிகள் திறக்கும் முன்பே பள்ளிகளில் மாணவ மாணவிகளின் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்து கொடுக்காமல் அதிகாரிகள் அலட்சிய போக்கில் செயல்பட்டதால் பெரும்பாலான மாணவ மாணவிகள் தாகத்தோடு கல்வி கற்பதால் பெற்றோர்கள் குற்றச்சாட்டு .சுட்டெரிக்கும் வெயிலில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு போர்க்கால அடிப்படையில் சீரான குடிநீர் விநியோகம் கிடைத்திட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாங்கூழ் கழிவால் நீர் மாசுபாடு: பொதுமக்கள் தைரியமாக புகார் அளிக்க வேண்டும் தமிழக முதல்வர் பிறந்த நாள் விழாவில் எம்.எல்.ஏ. முகுந்தன் வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி, ஜூன்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் பகுதியில் மாங்கூழ் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசுபாடு அதிகரித்து, விவசாயம் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கிருஷ்ணகிரி தொகுதி எம்.எல்.ஏ. முகுந்தன் தெரிவித்துள்ளார்.தமிழக முதல்வர் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பேசிய அவர், சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்க பொதுமக்கள் தைரியமாக முன்வந்து காவல் துறை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் புகார் அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.



மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகள் சுத்தமாக இருப்பது அனைவரின் பொறுப்பாகும் என்றும், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மாசுபாட்டை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் PDS குழுமம் சார்பில், கே.எஸ். சீனிவாசன், கே.எஸ். கோகுலன் ஏற்பாட்டில் 150க்கும் மேற்பட்ட ஏழை மற்றும் எளிய குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கு சீருடை மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

படப்பை, ஜூன்.23-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வடமேற்கு ஒன்றியம் சாலமங்கலம் ஊராட்சி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கு சீருடை மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சாலமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அரசு பள்ளி வளாகத்தில் சாலமங்கலம் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் அசோக், எம்.பிரகாஷ், ஆர்.ஏழுமலை, முனுசாமி, மகேஷ், ஏ.ஹரி, டி.அன்பு, பாலசுந்தர், என்.கே.மணிகண்டன், ஏ.ராமசந்திரன் ஆகியோர் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக குன்றத்தூர் வடமேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.விஜயகுமார், குன்றத்தூர் வடமேற்கு ஒன்றியச் துணை





செயலாளர் ஆர்.சரண்யா சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சீருடை வழங்குதல், பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல், பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களுக்கு சமையல் பொருட்கள் மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், சாலமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட அனைத்து கிளைச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## திருத்தேர்வளை ஊராட்சி விவசாயிகளை வஞ்சிக்கும் மின்வாரிய துறை ஆட்சி மாற்றம் வந்த போதும் காட்சி மாறவில்லை என விவசாயிகள் வேதனை

ஆர் எஸ் மங்கலம், ஜூன்.23-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளை ஊராட்சியில் திருத்தேர்வளை மேலக்கோட்டை , கீழக்கோட்டை , கப்பகுடி , வெள்ளாரேந்தால் , திருத்தேர்வளைகிஞ்குடியிருப்பு பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக விவசாய நிலங்களில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சீரமைத்து தர கோரி பலமுறை துறை சார்ந்த அதிகாரிகளிடம் கூறியும் எந்த பயனும் இல்லாததால் கோடை உழவு உள்ளிட்ட விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர் விவசாயிகளின் உயிரை காக்க விவசாய நிலங்களில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை போர்க்கால அடிப்படையில் சீர் செய்து தர அரசு மற்றும் துறை சார்ந்த அமைச்சர்,மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது ,கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எங்களது ஊராட்சிக்கு உட்பட்ட பெரும்பாலான கிராம பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளால் விவசாய பணி மேற்கொள்வதில் மிகுந்த சிரமம் அடைந்து வருவது





மட்டுமின்றி எங்களின் உயிருக்கும் உத்திரவாதம் இல்லா நிலை தொடர் கதையாக உள்ளது இது குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுடம் பல முறை கூறியும் பல்வேறு நாளிதழ்களில் செய்திகள் வெளிவந்தும் இன்று வரை எந்த சீரமைப்பு பணியும் நடைபெறவில்லை அவ்வப்போது பெயரளவில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வு பணி மட்டுமே செய்து விட்டு கிடப்பில் போடப்பட்டு வரும் அதிகாரிகளின் செயல்களால் ஆர் எஸ் மங்கலம் மின்வாரிய துறை விவசாயிகளை வஞ்சித்து வருகிறது எனவே புதிதாக பொறுப்பேற்று இருக்கும் அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் விவசாயிகளின் உயிரை காக்க விவசாய பணிகள் தொய்வு இன்றி நடைபெற இன்னும் ஒரு மாத காலத்திற்குள் விவசாய பணிகள் துவங்க உள்ள நிலையில் போர்க்கால அடிப்படையில் ஊராட்சி முழுவதும் விவசாய நிலங்களில் தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சீரமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 12 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.30,185/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (22.06.2026) அன்று வழங்கினார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.பூஷணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பெற்றுக் கொண்டார்.

## மதுரை மாவட்டத்தின் 220வது ஆட்சியராக நிஷாந்த் கிருஷ்ணா பொறுப்பேற்பு

மதுரை, ஜூன்.23-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (21.06.2026) புதிய மாவட்ட ஆட்சியராக திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் முன்பு உதவி ஆட்சியர், சார் ஆட்சியர், SIPCOT மற்றும் GUIDANCE நிறுவனங்களில் நிர்வாகப் பொறுப்புகள், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பதவிகளில் பணியாற்றியுள்ளார்.







Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161